**பவானி நகராட்சி**

**ஈரோடு மாவட்டம்**

**மே–2022 மாத நகர்மன்ற கூட்ட பொருட்கள்**

**நகர்மன்ற கூட்ட நாள் 20.05.2022**

**<u>மன்றப் பொருட்கள்</u>**

**பொருள் எண்: 1**

அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றி பவானி நகராட்சியில் 01.04.2022 சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்வதற்கான மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்தும். சொத்துவரி பொது சீராய்வுக்குப்பின் 2023 –2024 ஆம் ஆண்டு முதல் உள்ள சொத்துவரி தொகையில் 6 சதவீதம் உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் ( GSDP ) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.1 நாள்–11.04.2022 –ல் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நகர்மன்ற தீர்மானத்தை பொதுமக்கள் அறிந்து கொள்ளவும் ,பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் இருந்தால் நகராட்சி ஆணையருக்கு 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் தெரிவிக்கலாம் என்ற பொது அறிவிப்பு தினகரன் நாளிதழ்,இந்து தமிழ் நாளிதழ் 15.04.2022 மற்றும் Afternoon ஆங்கில நாளிதழில் 23.04.2022 .ம் தேதியிலும் வெளியிடப்பட்டது.மேற்கண்ட அறிவிப்பின் பேரில் பவானி நகராட்சி எல்லைக்குள் உள்ள பொதுமக்கள் மற்றும் இதர பிரிவினரிடமிருந்து ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை.

பவானி நகராட்சியின் பொது அறிவிப்பின் பேரில் பொதுமக்கள் மற்றும் இதர பிரிவினரிடமிருந்து ஆட்சேபனைகள் ஏதும் வரப்படவில்லை எனவே 11.04.2022 –ல் தீர்மானத்தில் நிர்ணயிக்கப்பட்ட திருத்தப்பட்ட சொத்துவரி பொது சீராய்வு அடிப்படை மதிப்பினை கீழ்கண்டவாறு உறுதி செய்து மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**<u>2022–2023 நிதியாண்டின் முதல் அரையாண்டு முதல் உயர்வு செய்யப்பட்டுள்ள சொத்துவரி பொது சீராய்வு மண்டல மதிப்பு விபரம்</u>**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கான காரணி | மண்டலம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | A | | B | | C | | D | |
| குடியிருப்பு | | பழைய மண்டல மதிப்பு ரூ. | புதிய மண்டல மதிப்பு ரூ. | பழைய மண்டல மதிப்பு ரூ. | புதிய மண்டல மதிப்பு ரூ. | பழைய மண்டல மதிப்பு ரூ. | புதிய மண்டல மதிப்பு ரூ. | பழைய மண்டல மதிப்பு ரூ. | புதிய மண்டல மதிப்பு ரூ. |
| <= 600 | 1.25 | 1,20 | 1.50 | 1.00 | 1.25 | 0.90 (பைசா) | 1.13 | 0.80 (பைசா) | 1.00 |
| 601 – 1200 | 1.50 | | 1.80 | | 1.50 | | 1.35 | | 1.20 |
| 1201–1800 | 1.75 | | 2.10 | | 1.75 | | 1.58 | | 1.40 |
| >1801 | 2.00 | | 2.40 | | 2.00 | | 1.80 | | 1.60 |
| வணிகம் | 2.00 | | 2.40 | | 2.00 | | 1.80 | | 1.60 |
| தொழிற்சாலை மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 1.75 | | 2.10 | | 1.75 | | 1.58 | | 1.40 |

சொத்துவரி பொது சீராய்வில் நிர்ணயிக்கப்படும் ஆண்டு மதிப்பில் தற்போது அமலில் உள்ள சொத்து வரி விகிதமான 10.5% சதவீதம் அரையாண்டு வரியாக நிர்ணயம் செய்யப்படும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில் ஆண்டுதோறும் 6 சதவீதம் உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் ( GSDP )சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்த சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்படும்.

**திருத்தியமைக்கப்பட்டுள்ள வார்டு மறுவரையறையின் படி புதிய வார்டுகள் வாரியாக தெருக்களின் விபரம்**

| வரிசை எண் | வர்டு எண் | தெருக்களின் பெயர் | கதவு எண் (முதல் – முடிய) |
|---|---|---|---|
| | | மண்டலம் –A | |
| 1 | 2 | மெயின்ரோடு | 437–559 , சி1–சி8 |
| 2 | 4 | மெயின்ரோடு | 155–436, |
| | | | 560–631, |
| | | | சி1 –சி36, |
| 3 | 8 | அந்தியூர் ரோடு | 1 –308 |
| 4 | 12 | மெயின்ரோடு | 319 –353 |
| | | | 632 – 796 |
| 5 | 14 | பழனியாண்டவர் கோவில் வீதி | 146 –187 |
| 6 | 14 | பாவடி வீதி | 1 –47 |
| 7 | 15 | மெயின்ரோடு | 238 –315 |
| | | | 810 –872 |
| 8 | 16 | பழனியாண்டவர் கோவில் வீதி | 80 –145 |
| | | | 188 –255 |
| 9 | 19 | பஜனை கோவில் வீதி | 1 –42 |
| 10 | 19 | பழனியாண்டவர் கோவில் வீதி | 1 –78 |
| | | | 256 –295 |
| 11 | 19 | மேற்கு கண்ணார வீதி | 1 –33 |
| 12 | 19 | மெயின்ரோடு | 161 –234 |
| | | | 882 –950 |
| 13 | 19 | கிழக்கு கண்ணார வீதி | 1 –32 |
| 14 | 21 | மெயின்ரோடு | 92 –152 |
| | | | 958 –1010 |
| 15 | 22 | பஸ் ஸ்டேண்டு ரோடு | 31 –51 |
| | | | 200 –374 |
| | | | சி1 –சி36 |
| 16 | 27 | மெயின்ரோடு | 1 –84 |
| | | | 1015 –1080 |
| 17 | 27 | பூக்கடை வீதி | 1 –45 |
| | | மண்டலம் –B | |
| 1 | 2 | காமராஜ்நகர் முதல் வீதி | 172 A –172 Z |
| | | | 213 A –213 Z |
| | | | 214 A–214 Z |
| 2 | 2 | வர்ணபுரம் 5 வதுவீதி (அண்ணாநகர்) | 228 எ –228 ஜே2டி |
| 3 | 3 | காமராஜ் நகர் முதல் வீதி | 1 – 255 |
| 4 | 4 | காமராஜ் நகர் பெருமாள் புரம் | 1 –117 |
| 5 | 4 | வர்ணபுரம் 5 வது வீதி (அண்ணாநகர்) | 15 –56 டி1 |
| 6 | 4 | வர்ணபுரம் 5 வது ரோடு | 1 –21 |
| | | | 179 –229 |
| | | | சி1 –சி16 |
| 7 | 5 | வர்ணபுரம் 5 வது வீதி (அண்ணாநகர்) | 1 –14 |
| | | | 57 –333 |

| | | | |
|---|---|---|---|
| 8 | 6 | மீனாட்சி கல்யாண மண்டபம் ரோடு | 31 –32 இ |
| 9 | | | 127எ –148 |
| 10 | 8 | சோமசுந்தரபுரம் | 1 –107 |
| 11 | 9 | வர்ணபுரம் 5 வதுரோடு | 22 –178 |
| 12 | 9 | மீனாட்சி கல்யாணமண்டபம் ரோடு | 1 –185 |
| 13 | 10 | வர்ணபுரம் முதல் வீதி | 1 –72 |
| 14 | 10 | குருநாதன் ரோடு | 1 –303 |
| 15 | 11 | வர்ணபுரம் 2 வது ரோடு | 1 –96 |
| 16 | 11 | வர்ணபுரம் 3 வது ரோடு | 1 –112 |
| 17 | 11 | வர்ணபுரம் 4 வது ரோடு | 1 –155 |
| 18 | 12 | தேவபுரம் | 1 –258 |
| 19 | 13 | பழனிபுரம் 2 வது ரோடு | 1 –22 |
| 20 | 13 | பழனிபுரம் 3 வது ரோடு | 1 –92 |
| 21 | 13 | பழனிபுரம் 4 வது ரோடு | 1 –184 |
| 22 | 13 | பழனிபுரம் 5 வது ரோடு | 1 –60 |
| 23 | 13 | பழனிபுரம் 6 வது ரோடு | 1 –85 |
| 24 | 13 | பழனிபுரம் 7 வது ரோடு | 1 –54 |
| 25 | 14 | பழனிபுரம் 1 வது வீதி | 1 –311 |
| 26 | 15 | வாரச்சந்தை ரோடு | 1 –27 |
| 27 | 15 | தானாசாவடி சந்து | 1 –30 |
| 28 | 16 | திருநீலகண்டர் வீதி | 1 –285 |
| 29 | 16 | மண்தொழிலாளர் 3 வது ரோடு | 54 –102 |
| 30 | 16 | தேவராஜன் சந்து | 1 –74 |
| 31 | 16 | சிவஞானம் சந்து | 1 –43 |
| 32 | 19 | காவேரி வீதி | 135 –220 |
| 3 | 21 | காவேரி வீதி | 76 –134 |
| | | | 278 –321 சி |
| 34 | 23 | சீனிவாசபுரம் 2 வது ரோடு | 1 –75 |
| 35 | 23 | சீனிவாசபுரம் கால்நடை மருத்துவமணை ரோடு | 1 –44 |
| 36 | 23 | பழைய பஞ்சாயத்து ஆபிஸ்ரோடு | 15 –25 |
| | | | 93 –104 |
| 37 | 23 | ஜோதிவிநாயகர் கோவில் வீதி | 1 –157 |
| 38 | 23 | மாரியம்மன் கோவில் வீதி | 1 –30 |
| 39 | 23 | பழனியாண்டவர் கோவில் சந்து | 1 –69 |
| 40 | 24 | பழைய பஞ்சாயத்துஆபிஸ் ரோடு | 26 –92 சி |
| 41 | 26 | ராயல்தியேட்டர்2வது ரோடு | 1 –164 |
| | | | 266–302 |
| | | | சி1 –சி12 |
| 42 | 26 | சீனிவாசபுரம் எக்ஸ்டென்சன் ரோடு | 1 –161 |
| 43 | 26 | பழைய பஞ்சாயத்து ஆபிஸ் ரோடு | 1 –12 |
| | | | 105 –125 |
| 44 | 27 | காவேரி வீதி | 1 –72 |
| | | | 322 –504 |
| | | **மண்டலம் –C** | |
| 1 | 17 | மண்தொழிலாளர் 2–வது சந்து | 1 –83 |
| 2 | 17 | மண்தொழிலாளர் 2 வது ரோடு | 1 –182 |
| 3 | 17 | மண்தொழிலாளர் 3 வது ரோடு | 1 –52டி |
| 4 | | | 103 –136 |
| 5 | 18 | மண்தொழிலாளர் 1 வது சந்து | 1 –33 |
| 6 | 18 | மண்தொழிலாளர் 1 வது ரோடு | 1 –330 |

| | | | |
|---|---|---|---|
| 7 | 20 | பசுவேஸ்வரர் வீதி | 1 –42 |
| | | | 1 –76 |
| | | | 154 –406 |
| | | | சி1–சி76 |
| 8 | 21 | தந்தைபெரியார் வீதி | 1 –120 |
| 9 | 21 | கீரைக்காரர் வீதி | 1 –110 |
| 10 | 21 | கீரைக்காரர் வீதி | 1 –59 |
| 11 | 22 | பஸ் ஸ்டேண்டு ரோடு (60 –199) | 60 –199 |
| 12 | 22 | மக்கான் வீதி | 1 –61 |
| 13 | 24 | கல்தொழிலாளர் முதல் ரோடு | 1 –227 |
| 14 | 24 | கல்தொழிலாளர் 2 வது ரோடு | 1 –63 |
| 15 | 25 | கல்தொழிலாளர் 3 வது ரோடு | 1 –197 |
| 16 | 25 | ராயல்தியேட்டர் 2 வது ரோடு | 165 –265 |
| | | | சி1 –சி26 |
| **மண்டலம் –D** | | | |
| 1 | 1 | சொக்கராயன் காடு | 1 –149, |
| | | | 456–467A |
| 2 | 1 | திருவள்ளுவர் நகர் | 223 –280 |
| 3 | 6 | சொக்கராயன் காடு | 150 –455 |
| 4 | 7 | திருவள்ளுவர் நகர் | 1 –222 |
| 5 | 7 | திருவள்ளுவர் நகர் எக்ஸ்டென்சன் | 1 –20 |
| | | | சி1 –சி161 |
| 6 | 15 | நந்தனார் வீதி | 1 –169 |
| 7 | 15 | மகாத்மா காந்தி ரோடு | 1 –108 |
| 8 | 27 | பாலக்கரை வீதி | 1 –78 |

**அலுவலக்குறிப்பு.**

நகர்மன்ற தீர்மான எண்.1 நாள்.11.04.2022 ல் உத்தேசித்துள்ள மண்டல அடிப்படை மதிப்புத் தொகையை உறுதி செய்யலாம்.

(ந.க.எண்.423/2022/அ1)

**தீர்மானம்**

நகர்மன்ற தீர்மானம் – 1, நாள் 11.4.2022ல் உத்தேசித்துள்ள மண்டல அடிப்படை மதிப்பு தொகையினை உறுதி செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.

**பொருள் எண்: 2**

பவானி நகராட்சி குடிநீர் திட்ட பணி அபிவிருத்திப் பணிகளுக்கு அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் 27.17 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணி அம்ரூத் 2.0 திட்டத்தில் பவானி நகராட்சியில் ஏற்கனவே உள்ள குடிநீர் திட்ட பணியில் நகராட்சியில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் உறிஞ்சு கிணறு, சுத்திகரிப்பு நிலையம், கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டி, மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி, பிரதான குழாய்கள் மாற்றி அமைத்தல், பகிர்மான குழாய்கள் அமைத்தல் போன்ற பணிகளுடன் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட வேண்டிஉள்ளதால் நகராட்சி நிவாக இயக்குநர் வழிகாட்டுதலின்படி மேற்படி திட்ட அறிக்கை தயார் செய்ய நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோர நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று 06.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்த்தாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s ECT Infra Solutions Pvt Ltd, Chennai. | 1% of Project Cost |
| 2 | M/s SSS Engineering, Chennai. | 1.25% of the Project Cost |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை (1% of Project Cost) வழங்கியுள்ள M/s ECT Infra Solutions Pvt Ltd, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) குடிநீர் அத்தியாவசிய தேவை முன்னிட்டு அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை 1% of Project Cost வழங்கிய M/s ECT Infra Solutions Pvt Ltd, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்: 1214/2022/இ1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்: 3**

பவானி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் நகர்புறம் (2.0) 2021−2022ன்கீழ் ரூ.24.96 இலட்சம் (மத்திய அரசு 50 சதவீதம் ரூ.12.00 இலட்சம் + மாநில அரசு 33 சதவீதம் ரூ.7.92 இலட்சம் + நகராட்சி பங்கு தொகை 17 சதவீதம் ரூ.5.04 இலட்சம்) மதிப்பீட்டில் 16 எண்ணிக்கைகள் கொண்ட கழிப்பிடம் மற்றும் 3 எண்ணிக்கைகள் கொண்ட Urinal சமுதய கழிப்பிடம் கட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 5990/2022/SBM நாள் 11.04.2022 கடித்த்தில் பிரேரணை அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளது.

எனவே ரூ.24.96 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய கழிப்பிடம் கட்டுவதற்கு உரிய திட்ட பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி நிர்வாக அனுமதி பெற மற்றும் உரிய இடம் தேர்வு செய்து கொள்ளும் விசயம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 1214/2022/இ1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்: 4**

இந்நகராட்சியில் இயங்கி வரும் வாகன எண்கள் TN 36 AY 6793 மற்றும் TN 36 AY 6791 வாகனங்களுக்கு 2022−2023ம் ஆண்டிற்கு ரூ.22934/− செலுத்த வேண்டி United India Insurance Company Limited நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட தொகையினை United India Insurance Company Limited நிறுவனத்தாருக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற் கொள்ளலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர் நோக்கி ரூ.22934/− யை United India Insurance Company Limited வழங்குவதற்கும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்: 739/2021/இ1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்: 5**

பவானி நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகன எண் TN 36 AY 6793 உள்ள பேட்டரி பழுதடைந்துள்ளதால் புதியதாக பேட்டரி வாங்கி பொருத்த உத்தேச செலவினத் தொகை ரூ.6000/- ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற் கொள்ளலாம்.
3) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர் நோக்கி செலவினத் தொகை வழுங்கவும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்: 520/2022/இ1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்: 6**

பவானி நகராட்சியில் அம்ரூத் 2.00 திட்டத்தின் கீழ் ஏற்கனவே உள்ள குடிநீர் ஆதாரத்திலிருந்து கூடுதலாக குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிக்கு ரூ.27.17 கோடி (மத்திய அரசு 50 சதவீதம் 13.59 கோடி, மாநில அரசு 30 சதவீதம் 8.15 கோடி நகராட்சி பங்கு தொகை 20 சதவீதம் 5.43 கோடி) அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு திட்ட பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்: 1214/2021/இ1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்: 7**

தமிழக அரசின் ஓராண்டு சாதனையினை விளம்படுத்தும் வகையில் பவானி நகராட்சி வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து 07.05.2022-ம் தேதிய தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் செய்யப்பட்டமைக்கான தினகரன் நாளிதழின் KAL PUBLICATION (P) LTD Coimbatore அவர்களுக்கு ரூ.21,420/- செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விளம்பரம் செய்யப்பட்டதினை மன்றம் ஏற்கலாம்.
2) மேற்படி செலவு தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்:425/2022/இ1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்: 8**

இந்நகராட்சியின் திடக்கழிவுகளை வீடுவீடாக துாய்மை பணியாளர் மூலம் தரம் பிரித்த குப்பைகள் சேகரிக்க பயன்படுத்தப்பட்டு வரும் கைத்தள்ளுவண்டிகள் வாங்கி 5 ஆண்டுகள் ஆகிவிட்டப்படியால் அந்த தள்ளுவண்டிகளில் பேரிங் மற்றும் டயர்கள் பழுதுகள் ஏற்பட்டு, புதிய டயர்கள் மாற்றவும் உடைந்த பாகங்களை வெல்டிங் செய்து பயன்படுத்த வேண்டி உள்ளதாலும், எனவே, பழுதடைந்த தள்ளுவண்டிகளை சரிசெய்து

நல்லமுறையில் இயக்கும் வண்ணம் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.3,00,000/-ற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 599 /2022/எச்1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்: 9**

பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:1 முதல் 27 முடிய உள்ள பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களினால் சாலைகளில் நடந்து செல்லும் பள்ளி மாணவ, மாணவியர்களையும், இரு சக்கர வாகனங்களின் செல்பவரையும், பொது மக்களையும் அச்சுறுத்தும் வகையில் உள்ளதாக பொது மக்களிடமிருந்தும், நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்து அடிக்கடி புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, தெரு நாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்தும் வகையில் நாய்களுக்கான கருத்தடை Animal Birth Control செய்திடவும், மேற்கண்ட பணிகளை செய்ய விலங்குகள் பாதுகாப்பு சட்டம் 2001இல் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு ரூ.3,00,000/-த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
3. மேற்கண்ட பணிக்கு தேவையான கட்டிட வசதி அமைப்பு, வாகன வசதி மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின் படியும், கருத்தடை செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 600 /2022/எச்1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்: 10**

பவானி நகராட்சி பொது சுகாதார பிரிவில் ஒரு லாரி, 4 மினி ஆட்டோ, ஒரு டிராக்டர், 44 கைவண்டிகள் வீடுவீடாக குப்பை வாங்கும் பணிகள், வீதிகள் தோறும் சாக்கடை மண்கள் அப்புறப்படுத்தும் பணிக்கு செடி, கொடிகள் அகற்றுதல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் சிறு சிறு பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பணிகள் தடையின்றி மேற்கொள்ள ஏதுவாக பொது சுகாதார சில்லறை செலவின முன்பணம் 2022–23 ஆம் ஆண்டிற்கு ரூ.1,50,000/–னை மாதாந்திர செலவின அடிப்படையில் செலவு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 601 /2022/எச்1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்: 11**

பவானி நகராட்சி – பொது சுகாதாரம் – இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சுகாதார பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண்: 101 (ந.நி.கு.வ.துறை), நாள்: 30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும். ஆனால், இந்நகராட்சியில் தற்போது 54 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வரும் நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 2255/எச்1/2019, நாள்: 29.11.2019–ன் படி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இந்நகராட்சிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் 63 துப்புரவு பணியாளர்களை M/s Relyon Facility Services private Ltd, Chennai நிறுவனத்திடமிருந்து பெற்று துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

வெளிப்பணி ஒப்படைப்பு முறை 30.04.2022 ஆம் தேதியுடன் ஒப்பந்தகாலம் முடிவடைகிறது. மேலும், ஒரு மாதத்திற்கு அதாவது 01.05.2022 முதல 31.05.2022 வரை காலநீட்டிப்பு செய்வதற்கும், M/s Relyon Facility Services private Ltd, Chennai அவர்களுக்கு பணி ஆணை வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்ற அனுமதிக்கலாம்.
2. நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்:2255/2015/எச்1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்: 12**

பவானி நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரபிரிவு, குடிநீர் பிரிவு, தெரு விளக்கு பிரிவுகளில் பழைய உபயோக படுத்த இயலாத நிலையில் உள்ள இரும்பு, பிளாஸ்டிக் மற்றும் இதர பொருட்களை பொது ஏலத்தின் மூலம் ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்ற அனுமதிக்கலாம்

(ந.க.எண்:629/2022/இ1)

**தீர்மானம்**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்: 13**

பவானி நகராட்சி பகுதிகளில் பல்வேறு இடங்களில் தனியார் வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் சார்பில் பல்வேறு விதமான விளம்பர பலகைகள், பேனர்கள், தட்டிகள் உள்ளிட்டவை சட்டபூர்வ அனுமதி பெறாமல் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும், இடையூறாகவும் விபத்து மற்றும் அசம்பாவித சம்பவங்கள் நடக்கும் வண்ணம் வைக்கப்பட்டுள்ளது. இதனை பவானி நகராட்சி பணியாளர்கள் மூலம் தினந்தோறும் அகற்றப்பட்டு வரப்படுகிறது. இதனால் வேலைப்பளு மற்றும் பணியாளர்களின் நேரம் வீணடிக்கப்படுகிறது. எனவே, இனிவரும் காலங்களில் பவானி நகராட்சி பகுதிகளில் உரிய அனுமதி பெறாமல் விளம்பரப்பலகைகள், பேனர்கள், தட்டிகள் வைப்பவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், அபராத தொகை விதிக்கவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. நகராட்சி பகுதிகளில் பேனர்கள், ப்ளக்ஸ்கள், விளம்பர பலகைகள் வைப்பது சென்னை உயர்நீதி மன்றத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் தகவலுக்கு.

2. அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் நகராட்சி பகுதிகளில் அனுமதியின்றி விளம்பர பலகைகள் வைப்பது குறித்து, நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தமிழக அரசு கூடுதல் தலைமை செயலாளர், சென்னை அவர்களால் 09.05.2022 ஆம் தேதிய பதிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்ட வாட்ஸ்அப் செயலி விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

(ந.க.எண். 630/2022/F1)

**தீர்மானம்**
அனுமதிக்கப்பட்டது